கூட்டு முன்னணியால் ஆட்சி முறையை மாற்றி அமைப்போம்!

Phone No 4502

விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458

[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (27—1—50) ✿ வெளியூர் (28—1—50) [இதழ் 153

நாசவேலைகளில் ஈடுபட நமக்குத் தெரியாதா?

அமைதியான முறையில் ஆவன செய்வோம்

வீண் பேச்சுப் பேசும் வீணரல்லர் நாம்

(o)

சென்னை மாநாட்டில் அண்ணாதுரை

"இந்த நாட்டின் எதிர்கால அரசியல் நிலையை நிர்ணயிக்கும் பல சந்தர்ப்பங்கள் வந்தன. அந்த சந்தர்ப்பங்களை எல்லாம் நாம் நழுவ விட்டுவிட்டோம். உதாரணமாக, இத்துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு அரசியல் தலைவர்களின் கருத்துக்களையறிந்து, ஒரு வழி காணவேண்டுமென்ற எண்ணத்தோடு சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வந்தக் காலத்தில் எல்லாத் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசி, ஒரு கருத்தை முடிவு செய்து கொண்டு டைரியை மூடிவிட்ட பிறகு, நமது தலைவர் அவரைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பால் பலனேதும் ஏற்படவில்லை."

"இந்த நாட்டின் முக்கியமான பிரச்னைகளை வைத்துக்கொண்டு, உங்கள் முன்னே பேசுகிறேன். ஓடுகிற ரயிலை, தந்திரமாகக் கவிழ்க்கவேண்டுமென்றால் எங்களால் முடியாதா? தந்திக் கம்பிகளை அறுத்தெறிவது இயலாதகாரியமா, என்ன? கையிலே ஒரு சுத்தியும், ஒரு சிறு பேனாக்கத்தியும், நெஞ்சிலே கொஞ்சம் துணிவும், போலீஸ்காரர்களுக்குக் கொஞ்சம் ஞாபக மறதியும் ஏற்படும்படி செய்துவிட்டால் போதுமே! பலாத்காரத்தால் நாட்டின் நிலையை எப்படி உயர்த்த முடியும்?

—பொதுச் செயலாளர் அண்ணாதுரை.

[சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டின் இரண்டாவது நாள் மாலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு]

தலைவர் அவர்களே!

தோழர்களே!

இரண்டு தினங்களாக மக்களிடையே காணப்படுகிற உணர்ச்சியைக் கண்டு திருப்தி அடைகிறேன். மாநாட்டுக்குக் கட்டணம் கேட்பது பற்றி தோழர்களிலே சிலர் கோபித்துக்கொள்ளுகிறார்கள். மாநாட்டையும் கழகத்தையும், நாம் பொதுமக்களின் பணத்தைக் கொண்டுதான் நடத்த வேண்டும். நாம் கழகத்தை நடத்த, தென்னாட்டு பிர்லாக்களிடம் காவடி எடுக்க முடியாது. இரண்டாயிரம் ரூபாயைப் பணக்காரனின் பையிலிருந்து செலவழிப்பதைவிட ஏழையின் ஓட்டைப் பாக்கெட்டிலிருந்து செலவழிப்பதே மேல் சக்தியும் அதிகம்.

ஏழை மக்களாலேயே இந்த இயக்கம் நடைபெறுவதால் ஏழை மக்கள்தான் இதற்குப் பணம் தந்துதவவேண்டும். இந்திய ஏகாதிபத்தியத்தின் அரசியல் திட்டத்தைப் பற்றியும், 26ந் தேதி அன்று நடைபெற இருக்கும் குடியரசுத் திருநாளின் கொண்டாட்டத்தைப் பற்றியும், தோழர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், நடராசன், மதியழகன் முதலியோர் வீரம் கலந்த குரலிலே உங்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

வாய்ப்புகள் பல இழந்தோம்!

இந்த நாட்டின் எதிர்கால அரசியல் நிலையை நிர்ணயிக்கும் பல சந்தர்ப்பங்கள் வந்தன. அந்தச் சந்தர்ப்பங்களை எல்லாம் நாம் நழுவ விட்டுவிட்டோம். உதாரணமாக, இத்துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு அரசியல் தலைவர்களின் கருத்துக்களையறிந்து, ஒரு வழி காண வேண்டுமென்ற எண்ணத்தோடு சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வந்த காலத்தில், எல்லாத் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசி, ஒரு கருத்தை முடிவு செய்துகொண்டு டைரியை மூடிவிட்டபிறகு, நமது தலைவர் அவரைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பால்பலனேதும் ஏற்படவில்லை.

தோழர் ஜின்னாவை நமது தலைவர் சந்திக்க விரும்பிய போது நான் உடன்வர மறுத்தேன் என்றும், நான் அப்பொழுதே ஆத்திரம் செய்தேன்என்றும்சமீபத்தில்பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தார். நான் உடன்போக மறுத்தது உண்மைதான். தோழர் ஜின்னாவை ஒரு திடமான முடிவை வைத்துக்கொண்டிருந்தார்கள். வெறும் உபசாரத்திற்காகப் பார்ப்பதில் பலனேதும் இல்லை என்று சொன்னேன். தலைவருடைய சந்திப்பு வெறும் உபசாரச் சந்திப்பே என்பதை நான் அறிந்துகொண்ட காரணத்தால் தான் உடன் போக மறுத்தேன். தலைவரோடு, "சண்டே அப்சர்வர்" ஆசிரியர் தோழர் பி. பாலசுப்பிரமணியம், இப்பொழுது சைவசீலராக விளங்கும் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் ஆகியவர்கள் உடன் சென்றார்கள். சென்றவர்கள்மூவரும் திரும்பி வரும்போது மனக் கசப்புடன் தான் திரும்பிவந்தார்கள்.

சந்தர்ப்பம் அப்பொழுதும் தவறிவிடப்பட்டது. தோழர் அம்பேத்காரைச் சந்தித்த வாய்ப்பும் பயனற்றே போயிற்று. இப்படியாகத் தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம்.

வாய்ச்சொல்லில் வீரர்கள்

"நாங்கள் இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்று கூறிவிட்டுப் பிறகு எதையும் செய்யாமல் இருக்கும் ஏமாளிகளல்ல நாங்கள். ஏதாவது கூறுகிறோம் என்றால், அதை அமைதியான சூழ்நிலையில் நடைமுறையில் காட்ட வேண்டும் என்றே விரும்புகிறோம். காங்கிரஸ்காரர்கள் வீரமிழ டேசினார்கள் ஒரு காலத்தில், பிறகு எவை எவைகளுக்குத் தலைவணங்க மாட்டோம் என்றார்களோ அவற்றிற்கெல்லாம் தலை தாழ்ந்தனர்.

தோழர் எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் 1935ல் 'சட்டத்தை உடைக்கப்போகிறோம், புதிய சட்டத்தை உண்டாக்கப் போகிறோம்' என்று சிம்ம கர்ஜனை செய்தார். என்ன ஆயிற்று?

ஒரு சட்டத்தையும் அவர்கள் உடைக்கவில்லை! அதே சட்டத்தை வைத்துக்கொண்டு தான் மந்திரிகள் அமுல் நடத்துகிறார்கள்.

இந்த நாட்டின் முக்கியமான பிரச்னைகளை வைத்துக்கொண்டு, உங்கள் முன்னே பேசுகிறேன் ஓடுகிற ரயிலை தந்திரமாகக் கவிழ்க்கவேண்டுமென்றால் எங்களால் முடியாதா? தந்திக் கம்பிகளை அறுத்தெறிவது இயலாத காரியமா, என்ன? கையிலே ஒரு சுத்தியும், ஒரு சிறு பேனாக் கத்தியும், நெஞ்சிலே கொஞ்சம் துணிவும், போலீஸ்காரர்களுக்குக் கொஞ்சம் ஞாபக மறதியும் ஏற்படும்படி செய்துவிட்டால் போதுமே! பலாத்காரத்தால் நாட்டின் நிலையை எப்படி உயர்த்த முடியும்?

நமது சுதந்திரம் ஓர் மாடப்புறா!

கோபுரத்தின் உச்சியில் இருக்கிற மாடப் புறாவை காம் பிடிக்கவேண்டும். மாடப் புறாவைப் பிடிக்க வேண்டியவன் ஒரு கால் முடவனாயிருக்கிறான். புறாவோ நம்முடையது; கோபுரமோ மாற்றானுடையது. கோபுரம் ஏற வேண்டியவனுக்கோ ஒரு கால் முடமாகிவிட்டது. ஊனமாகிய ஒரு காலைவைத்துக்கொண்டே

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

மூன்றாவது உலகப்போருக்கு முஸ்தீபு!

இலங்கை மாநாடு பற்றிய கண்டனம்

கொழும்பில் கூடிய காமன்வெல்த் வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாடு மூன்றாவது உலகப் போருக்கு அடிகோலியிருக்கிறது என்று, இலங்கைக் கம்யூனிஸ்டு கட்சியும், இலங்காசமாஜ என்னும் டிராட்ஸ்கி கட்சியும் தனித்தனியே அறிக்கைகள் விடுத்திருக்கின்றனர், அத்துடன் இலங்கைக் காமன்வெல்த் மாநாட்டைக் கண்டிப்பதற்காக இலங்கைப் பார்லிமெண்ட்டில் கண்டனத் தீர்மானம் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கின்றனராம்.

இந்தோனேஷ்யாவில் போட்டி சர்க்கார்?

வெஸ்டர்லிங் சதி!

லண்டன், ஜன. 26—

இந்தோனேஷிய ராணுவத்தை ஒழித்துவிட்டு போட்டி சர்க்காரை இந்தோனேஷ்யாவில் ஏற்படுத்துவதே வெஸ்டர்லிங்கின் திட்டம் என்று இங்கு கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

அவருடைய படைகளில் யார் யார் இருக்கிறார்கள் என்பது குறித்து விவரமான தகவல்கள் கிடைக்கவில்லை என்றாலும், அதில் ஜாவா வெறியர்கள், கம்யூனிஸ்ட்டுகள் பட்சுராணுவத்திலிருந்து ஓடியவர்கள் இவர்கள் இருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. வெஸ்டர்லிங்கே தான் ஒரு முஸ்லிம்தான் என்று கூறிக்கொள்கிறார். இவர் 1948ல் லார்ட் மவுண்ட்பேட்டனின் மெய்க் காப்பாளராக இருந்திருக்கிறாராம்.

மாய யானை!

மந்திரத்தாலல்ல யந்திரத்தால்!

லண்டன், ஜன. 26—

எஸெக்ஸில் வசிக்கும் பிராஸ்டுவர்ட் என்பவர் ஒரு இயந்திர யானையைச் செய்திருக்கிறார். இது மணிக்கு 28 மைல் வேகத்தில் நடக்கக்கூடியது என்பதுடன் துதிக்கையையும், காதுகளையும் ஆட்டக்கூடியது.

இதற்குள் பெட்ரோல் எஞ்ஜின் வைத்து இயக்க வேண்டுமாம். இத்தகைய யானைகள் 500 அனுப்பி வைக்கும்படி அமெரிக்காவில் இருந்து ஆர்டர் வந்திருக்கிறதாம்.

இருதய நோய்களுக்குப் புது மருந்து

நியூயார்க், ஜன. 26—

ட்ராடுமக்ஸன் என்ற புது மருந்து ஒன்று ஸ்விட்ஸர்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எப்பேர்பட்ட இருதய நோய்களையும் இது குணப்படுத்தி விடுகிறதாம். ரத்தம் உறைந்துபோகாமல் தடுக்க இது உதவுகிறதாம்.

எதிர்காலத்தில் ஸ்டாலினே வெற்றிபெறுவார்!

முன்னாள் அமெரிக்க மந்திரியின் அரசியல் ஆரூடம்!

"மேலை நாடுகளுக்கும் ரஷிய குழு நாட்டினருக்குமிடையே நடைபெற்றுவரும் மிரட்டல் யுத்தத்தில் மார்ஷல் ஸ்டாலின்தான் வெற்றி பெற்றுவருகிறார். இந்த வெற்றி தொடர்ந்து அவருக்குக் கிடைத்து வருமானால், 1955-ல் கம்யூனிஸ்டுகள் மேலைய நாடுகளையே சூழ்ந்து கொள்ளுவார்கள்." என்று அமெரிக்க அரசாங்க இலாகாவின் முன்னாள் உதவி அமைச்சர் தோழர் கிளேட்டன் மேலை நாடுகளை எச்சரித்தார்.

பிரிட்டனுக்கு இந்திய சணல்

லண்டன், ஜன. 26—

இந்திய சணல் மில்களின் உற்பத்தி ஏராளமாக அதிகரித்திருப்பதால் பிரிட்டனுக்கு கல்கத்தாவிலிருந்து அனுப்பப்படும் சணல் சாமான்கள் அதிகரிக்கப்பட்டு விடுமென்று நம்பிக்கை இன்று ஏற்பட்டிருக்கிறது.

மாலை மணி

சென்னை 27—1—50 வெள்ளிக்கிழமை

குடியரசும் குடிமகனும்

இந்தியத் துணைக்கண்டத்தின மத்தியிலும் மாகாணங்களிலும் அதிர்ஷ்டவசமாகவோ, துரதிர்ஷ்டவசமாகவோ அரியணை யேறிவிட்ட ஆட்சியாளர்கள் ஆரவாரித்தனர். அன்பு மொழி பேசினர்; ஆராத்தி பெற்றனர்; இன்சுவை யுண்டியும் இன்பந்தரும்பானங்களும் அருந்தி மகிழ்ந்து ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டனர். ஆளுங்கட்சியாரை அண்டி வாழும்சூதாடிகள், முட்டைப் பூச்சிகள் இன்னபிற பகல் வேஷம் போட்டுக் கொண்டு பறைசாற்றித் திரிந்து பேரவாவைத் தீர்த்துக்கொண்டன. பணமூட்டைகள், தனப்பெட்டிகள், கள்ளமார்க்கெட் கழுகுகள், கொள்ளை லாப முதலைகள், வருமான வரியை ஏமாற்றும் வல்லூறுகள் முதலியவை பெரும் பெரும் மூவண்ணக் கொடிகளை உயரகப் பட்டுத் துணிகளால், விண்ணை முட்டுமளவுக்கு(!) நாற்றிசையையும் தழுவுமளவுக்குத் தயாரித்துத் தங்கள் தங்கள் மாட மாளிகைகளில் பறக்கவிட்டன. முதலாளி வர்க்கம் பூரித்தது; சுரண்டல் கூட்டம் சாந்திபெற்றது; டாட்டா-பிர்லா-டால்மியா-கோயங்கா கும்பல் கொம்மாளமடித்தது. சென்னை சௌகார் பேட்டை அன்று 'சொர்ணபுரி'யாக மட்டுமல்ல, 'குதூகலபுர'மாகவும் காட்சியளித்தது. பன்னிற மின்சார விளக்குகள், பலவகைக் கொடி தோரணங்கள், பரபரப்பான விழாக் கொண்டாட்டங்கள் பெருமிதத்துடன் ஏற்பாடு செய்து மன நிம்மதியடைந்தன பணப் பெருச்சாளிகள்.

ஜனவரி 26-ந் தேதி அன்று இந்தியாகுடியரசு நாடாகவிட்டதென ஆளும் வர்க்கத்தார் பிரகடனஞ் செய்தனர். ஆம், குடியரசாகிவிட்டது இந்தியா என்று ஏகோபித்து ஏற்றுக்கொண்டனர் மேற்படி வர்க்கத்தினர். குடியரசு குதூகலம் யாருக்குஆரம்பமாயிற்று என்பதைக் கும்மாளமடித்தக் கும்பலைக் கொண்டு உள்ளங்கை நெல்லிக்கனி போல் உணர்ந்து கொள்ளலாம்.

குடியரசுத் துவக்கநாளன்று ஆணவ-அகங்கார-சுயநல-சுரண்டல்- பிற்போக்கு- பாஸிஸ- மனப் போக்குடைய சிறு கும்பலிடையே சிறப்பைக் கண்டோம்; மகிழ்ச்சியைப் பார்த்தோம்; ஆரவாரத்தை யுணர்ந்தோம்; அன்று அவர்கள் மத்தியில் தேசியத் திருவிழா நடைபெற்றதைத் தெரிந்தோம்! உணவைச் சுதந்திரம், விடுதலை, உரிமை, பெருநலன் இத்தியாதி யனைத்தும் அவர்களுக்கே நூற்றுக்கு நூறு வந்து குடி புகுந்திருப்பதைக் கண்ணாரக் கண்டு தெளிந்தோம்!

குடியரசுத் துவக்க நாளென்று இவ்வுபகண்ட ஏக போக பத்திரிகைக் கூடாரமும், ஒரு கட்சி அணைத்திந்திய வானொலி நிலையமும், தேசியத் திருக்கூட்டமும், திக்விஜய தம்பிரான்களும் சரக்கு உள்ள வரை சலியாத பறைசாற்றிய அத் 'திருநாளன்று' சாதாரணக் குடிமகன் உள்ளத்தில் ஒரு அணுவளவுக்காவது இன்பம் சுரந்திருக்குமாவென்னக் கேட்கிறோம். குடியரசுக் கொண்டாட்டம் அவனுக்கு ஒரு புரியாத புதிராகவே இருந்துவிட்டதென்பதையாரே மறுக்கவல்லார்? குடியரசுக் கொண்டாட்டத்துக்கும் குடிமகனுக்கும் நூலிழைத் தொடர்புகூட இல்லாத ஏமாற்றுத்திருவிழாஎன்நாட்டு வரலாறுங்கூறுசெய்தியே யாகும். விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு தியாகங்கள் பல புரிந்த லட்சாதி லட்சம் நாட்டு மக்கள், தோன்றுந் துணையாகவும் நீங்காத் தோழனாகவும் நெடுநாள் நெருங்கி வாழும் பட்டினி-பசி பஞ்சத்திடமிருந்து விடுதலை விழைந்து நிற்கும் எண்ணிலடங்கா ஏழையர் கூட்டம், குந்த குச்சியின்றி -வானமே கூரையாய்-கையே தலையணையாய்க் கொண்டு பெருமூச்செறிந்து நிற்கும் பெருவறிக்கூட்டம், இன்றியமையாத தேவைகள்கூட எத் துணையும் கிடைக்கப்பெறாது பிணியால் பிடிக்கப்பெற்று, புழுக்களினும் கேவலமாய் நெளிந்து நெளிந்துழையும் பல லட்சப் பாமரக் கூட்டம், தோளில் வலிமையும் நெஞ்சில் உரமும் நிறைய இருந்தும்-உழைத்துப் பாடுபட்டு, உண்மை வாழ்வு வாழ உளமிருந்தும் வேலை யளிக்கப் பெறாது விரட்டப்படும் எண்ணற்ற இளவாலிபக் கூட்டம், ஆதிக்கச் சுரண்டல் வர்க்கத்தின்-ஏகாதிபத்திய இறுமாப்புக் கும்பலின் இறுகியபிடியில் சிக்கித் தவிக்கும் ஏழைப் பாட்டாளி- விவசாயி- மக்கள் கூட்டம் இன்னபிற நாட்டின் 95 சதவிகித மக்கள் எவ்வள இன்பமுற்றனர் 26-ந் தேதியன்று? அவர்கள் உள்ளம் உவகையால் பொங்கி, நடை பெருமிதத்தால் பீடுற்றுப் பெருமைகொள்ள, எண்ணஞ் சிறக்க உள்ளத்தின சாதகநிலையடைந்திருப்பரா அன்று? எதிர்காலம் வளமும் சிறப்பும், பெரும் பெருமையும் சிறந்து விளங்குமென்று அவர்களிது வரை கண்டுவந்த இன்பக் கனவு இன்று சிதைந்து மங்கிய பகற்கனவாயிற்றெனில், அது உயர்வு நவிற்சியாகுமா? இன்பக் கனவு துன்பக்கேணியில் சேர்த்த சூதுத் திருவிழாவாகவே காட்சியளித்தது குடியரசுத் திருவிழா எண்ணிலடங்கா இவ்வுபகண்ட மக்களுக்கு!

இந்தியக் குடியரசுத் துவக்க விழாவென்ற இவ் ஏமாற்று நடப்பு பற்றித் திராவிட முன்னேற்றக் கழகம் வரையறுத்து தெளிவுபெறத் தனது கருத்தைத் தெரிவித்துவிட்டது. தென்னாட்டு மக்களின் அதிருப்திக்குரிய அவர்களுக்குமகிழ்ச்சி தரத்தக்கதல்லாத-வெறுப்புக்கும் அலட்சியத்துக்கும் உரிய நாள் இக்குடியரசு நாள் என்று தெரிவித்து, சுதந்தரசுயேச்சை சமதர்ம திராவிட குடியரசே தனது லட்சியமென அறுதியிட்டுக் கூறிவிட்டது திராவிட முன்னேற்றக் கழகம். இதற்கான ஆக்கவேலைகளில் முழு முச்சுடன் முனைந்து நிற்கவும் முற்பட்டுவிட்டது முன்னேற்றக் கழகம். இடையில், வருஞ் சிலவாண்டுகளில், பரிதாபத்துக்குரிய இந்நாட்டு மக்கள் நிலை படுமோசமாகிவிடக் கூடாதென்ற பெரு நினைப்போடு, நம் பெரும் பணியிலீடுபடுவோமாக!

பொதுச்செயலாளரின் மதுரைமாவட்டச் சுற்றுப் பயணம்

தி. மு. க. பொதுச் செயலாளர் தோழர் சி.என்.அண்ணாதுரை அவர்கள், தோழர்கள் என். வி. நடராசன், ஈ. வி. கே. சம்பத், என். ஜீவரத்தினம் ஆகியோருடன், பிப்ரவரி 7-ந் தேதிமுதல் 12-ந் தேதி வரை மதுரை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்வார்கள். விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இரா. நெடுஞ்செழியன்
செயலாளர், பிரசாரக்குழு.

போனஸா? போகஸா?

இந்தியக் குடியரசு பிரகடனத்தை முன்னிட்டு சென்னை சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஒரு மாத சம்பளம் போனஸ் கொடுக்கப்போவதாக ஒரு வதந்தி உலவியது. பம்பாய் சர்க்கார் அங்ஙனம் செய்யப் போவதாக எழுந்த தந்தியே இதற்குக் காரணம்.

இது பற்றி விசாரித்ததில் அப்படியே போனஸ் கொடுப்பதாக இருந்தால் குறைந்தது 1½ கோடி செலவாகுமென்றும், அதனால் அத்தகைய அபிப்பிராயம் சர்க்காரின் யோசனையிலேயே இல்லை என்றும் நிதி அமைச்சர் தோழர் கோபால்ரெட்டியார் தெரிவித்தார்.

—

[illegible]வுக்குத் திரும்பி வர்ச்சி பதவி ஏற்குமாறு முன்னாள் பிரசிடெண்ட் [illegible] அழைப்பதாக [illegible] கொண்ட [illegible] அமைக்க [illegible] வருகிறது.

அறிவுக் கதிர்!

—அறிவால் அன்புள்ளமும், அன்பால் நேரான எண்ணங்களும், அதனால் கல்வி நிறைந்த மனிதர்களும், அவர்களால் இன்பம் நிறைந்த குடும்பங்களும், அவைகளால் ஒழுங்கான ஜன சமூகமும், அதனால அமைதியான உலகமும் உண்டாகும். தோட்டி முதல் தொண்டைமான் வரையில் அனைவரும் தங்களைத் தாங்களே திருத்திக்கொள்ள முற்படவேண்டும்.

கோன்புத்லன்.

உணவு உற்பத்தியைப் பெருக்க

உயர்தரமான விதைகளின் பயன்

உணவு உற்பத்தியை நிச்சயமாகப் பெருக்கக்கூடிய விவசாய முறைகளில் உயர்தரமான விதைகளை உபயோகிப்பது ஒன்றாகும். இதன் மூலம், ஒரு விளைநில விளைச்சல் குறைந்த பட்சம் 10 பெர்சென்ட் முதல் 15 பெர்சென்ட் வரை அதிகரிக்குமென்று நிச்சயமாகக் கூறமுடியும். இது காரணமாகவே உணவு உற்பத்தி இலாக்காவில் விதை விருத்தி, விநியோகத்திட்டங்கள் விஷயத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஐந்தாண்டு காலத்தில் உணவு தானிய சாகுபடி செய்யப்படும் மொத்தம் 1½ கோடி ஏக்கரில் உணவு சுயதேவை பூர்த்தியடைவதற்கு திட்டமிடப்பட்டுள்ள பகுதிகளில், எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு நிலத்தில் உயர்தர விதைகளை உபயோகிக்க வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வைப்பதற்காக, மத்திய சர்க்கார் மாகாணங்களுக்குக் கடனாகவும், நன்கொடையாகவும் பணம் கொடுத்து உதவி செய்து வருகின்றனர். சென்ற ஆண்டு மத்திய மாகாணம், திருவாங்கூர்—கொச்சி யூனியன், கிழக்குப் பஞ்சாப், ஒரிசா, மைசூர், பீஹார், விந்தியப் பிரதேசம் ஆகிய மாகாணங்களில் விதை உற்பத்தித் திட்டங்களுக்காக மத்திய சர்க்கார் மொத்தம் 5,50,000 ரூபாய் அளித்திருக்கின்றனர்.

மாகாணங்களில் தற்போது உயர்தரமான விதைகள் உபயோகிக்கப்படுகிற நிலப்பரப்பு 1½%-லிருந்து 7% வரை பலவாறாக இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இதனோடு மாகாணங்களில் மாத்திரம் மிக அதிகமான நிலப்பரப்பில் உயர்தரமான விதைகள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. மத்திய மாகாணத்தையும் சென்னையையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். மத்திய மாகாணத்தில் 24.7% நிலத்திலும், சென்னையில் 23.6% நிலத்தில் உயர்தர விதைகள் உபயோகிக்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

—

லண்டனுக்கு இஸ்ரேல் பொருளாதார வல்லுநர்

லண்டன், ஜன். 26—

இஸ்ரேல் பொருளாதார நெருக்கடிக்குச் சமாளிக்க வழி காண்பதற்காக இஸ்ரேலின் பிரபல பொருளாதார வல்லுநர் ஹரோவிட்ஸ் லண்டன் வந்து பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கண்டு பேசிவருகிறார். முடக்கப்பட்ட பவுன்களை நிதியை விடுவிக்க வேண்டுமென்று அவர் கோருவதாகத் தெரிகிறது.

பரோடா மன்னர் விமானத்தை விற்கிறார்

லண்டன், ஜன. 26—

பரோடா மகாராஜா தனக்குச் சொந்தமான ஆடம்பர வசதிகள் அமைந்த டாகோடா விமானத்தை விற்றுவிட தீர்மானித்துவிட்டார். இந்த விமானத்தில் சகலவித சௌகரியங்களும், [illegible] அறை வசதிகளும், படிப்பதற்கான இடமும், மற்றும் ஆடம்பர வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய வசதிகள் யாவும் அதில் இருக்கின்றனவாம். —[illegible]

—

பிரிட்டன் நார்வே நிதிப் பேச்சுவார்த்தை

லண்டன், ஜன. 26—

பிரிட்டனுக்கும், நார்வேயுக்கும் நிதி விஷயமாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. நார்வேயிலிருந்து மீன்கள் எவ்வளவு பிரிட்டனுக்கு அனுப்பப்பட வேண்டியது என்பதைப்பற்றியும், நார்வேயுக்கு எவ்வளவு கப்பல்களைப் பிரிட்டன் விற்கவேண்டும் என்பதைப் பற்றியும் ஒரு முடிவு செய்யப்படுமென்று தெரிகிறது.

—

பெர்லினில் சில திருடர்கள்

பெர்லின், ஜன. 26—

ரஷ்யா—ஜெர்மன் பகுதியில் சிலர் உள்ள உலோகங்களைப் பெயர்த்தெடுத்துக்கொண்டு போவதில் சிலர் தீவிரமாக முனைந்திருக்கின்றனர். இந்த உலோகத் துண்டுகளை விற்று கள்ளமார்க்கெட்டில் நிறைய பணம் சம்பாதிக்கிறார்களாம்.

—

கிழவியின் பிழைக்கும் வழி!

திருத்தங்கல், ஜன. 27—

இவ்வூருக்கு அருகு உள்ள பேயாம்பட்டி, தாயில்பட்டி, சிவகாசி முதலிய இடங்களில் ஒரு கிழவி, "மாரியம்மா" என்று சொல்லிக்கொண்டு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அரிசி, நெல், தீப்பெட்டி முதலியவைகளைக் கேட்கிறாள். இல்லையென்று சொன்னால் உன் வீட்டில் "மாரியாத்தா" வந்து உன் குடும்பத்தை நாசமாக்கிவிடும் [illegible] என்று சொல்லி மிரட்டுகிறாள். ஏமாந்த சிலர் அவளை வணங்கி தானியங்களை வாரிவழங்குகின்றனர்.

எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு வீட்டு வாசலில் [illegible] இலையையும், [illegible] போட்டு வைக்கும்படி சொல்லுகிறாள். அந்தக் கிழவி [illegible] பிழைக்கும் வழி என்னுகிறாள். பட்டி தொட்டிகளிலெல்லாம் ஒரே பரபரப்பாகவும் வீட்டு வாசல்களில் இலை கட்டியிருக்கும் காட்சியைக் காணக் கூடியதாக இருக்கிறது.

தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

———(0)———

28 - 1 - 50

ஆம்பூர் :— முனுசாமி, க. நெடுஞ்செழியன்
ப. துரை அரசு.

தாராபுரம் :— சி. அன்பழகன்.

29-1-50

கனியூர் :— கோவை மாவட்ட தி. மு. கழக முதல் மாநாடு

தெ. ஆ. வட்ட மேஜை மாநாடு

மலான் சார்க்கார் மந்திரி நம்பிக்கை

லண்டன், ஜன. 25—

கொழும்பு மாநாட்டில் தென் ஆப்பிரிக்க மந்திரி இந்தியப் பிரதிநிதிகளைச் சந்தித்து நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடத்தினர் என்றும் இதன் விளைவாக தென்னாப்பிரிக்காவில் நடைபெற இருக்கும் வட்டமேஜை மாநாட்டில் இந்திய தென்னாப்பிரிக்க தகராறு தீர்க்கப்பட்டு சுமுகமான உறவு ஏற்படும் என்று மந்திரி கருதுவதாக லண்டனிலுள்ள தென்னாப்பிரிக்க ஹைகமிஷனர் காரியாலய அதிகாரி கூறினர். தென்னாப்பிரிக்க இந்தியர்கள் பிரச்னை என்று குறிப்பிட்டு கொழும்பு பேச்சுவார்த்தைகள் பேசப்படவில்லை என்றும், பொதுப்படையான விஷயங்கள் பேசப்பட்டது என்றும் அவர் கூறினர்.

மத்திய கிழக்கில் தட்பவெப்ப நிலை கோளாறு

டமாஸ்கஸ், ஜன. 25—

மத்திய கிழக்கில் கோளாறு தட்பவெப்ப நிலை இன்று இருந்து வருகிறது.

வடசிரியாவில் பனிப்புயல் அடிக்கிறது. அலெப்போ என்ற இடத்தில் கடும் குளிரினால் தண்ணீர் எல்லாம் உறைந்து விடுகிறதாம். இம்மாதிரி மத்திய கிழக்கில் தட்பவெப்ப நிலை இருந்ததே இல்லை.

கால நிலை மகாமோசமாக இருந்ததினால் அகாபா வளைகுடாவிலுள்ள எடின்பரோ டியூக்கை சந்திக்கச் செல்ல இருந்த பயணத்தை அப்துல்லா மன்னர் ரத்து செய்துவிட்டார்.

ஐரோப்பிய நாடுகளில் துறைமுக 'ஸ்டிரைக்' தூண்ட முயற்சி

லண்டன், ஜன. 25—

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அவைகளின் பாதுகாப்புக்காக யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பல் மூலம் அனுப்பும் ஆயுத உதவியைக் கிடைக்காமல்செய்ய ஐரோப்பிய நாடுகளின் துறைமுகங்களில் ஸ்டிரைக்கை அடுத்த மாதம் தூண்டிவிட கம்யூனிஸ்டுகள் ஆயத்தம் செய்து வருவதாக, ரகசியத் தகவல் சர்வதேச போக்குவரத்துத் தொழிலாளர் பெடரேஷன் உஷார் கமிட்டிக்கு கிடைத்திருக்கிறது.

அப்படி வேலை நிறுத்தம் ஏற்பட்டால் இதனால் பிரான்ஸும், இதாலியும் மிகவும் பாதிக்கப்படும்.

இந்தியாவுக்கு இராக் பேரீச்சம்பழம்

பாக்தாத், ஜன. 2[illegible]—

இராக்கிலிருந்து பேரீச்சம் பழம் இறக்குமதி செய்ய இந்திய வியாபாரிகளுக்கு லைசென்ஸ் அளிக்க, இந்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதாக செய்தியறிந்தவட்டாரங்களில் கூறப்படுகிறது.

இந்தியாவின் சுப்ரீம் கோர்ட் ஜனவரி 28-ந் தேதியன்று டெல்லியில் துவக்கி வைக்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது.

கோவை மாவட்ட தி. மு. கழக

முதல் மாநாடு

29-1-50 ஞாயிறு காலை 8-மணிக்கு

கணியூரில், தோழர் த. அ. முஹமது உசேன் ராவுத்தர் அவர்கள் இடத்தில் அமைந்திருக்கும்

"அர்ச்சுனன் பந்தலில்" நடைபெறும்

நகைச்சுவை அரசு

என். எஸ். கிருஷ்ணன் அவர்களின்

வில்லுப் பாட்டுடன் மாநாடு துவங்கும்

மாநாட்டுத் தலைவர், கொடி உயர்த்துபவர் :

தோழர் ப. உ. சண்முகம்

(திருவண்ணாமலை நகராண்மைக் கழகத் தலைவர்)

மாநாட்டைத் துவக்குபவர் :

தோழர் ஜி. பி. சோமசுந்தரம்

(பேளுக்குறிச்சி)

மாநாட்டில் தோழர்கள் :

சி. என். அண்ணாதுரை எம். ஏ.
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
கே. ஏ. மதியழகன் பி. ஏ.
க. அன்பழகன் எம். ஏ.
இரெ. இளம்வழுதி பி. ஏ.
மு. கருணாநிதி
ஈ. வெ. கி. சம்பத்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். வி. நடராசன்
டி. கே. சீனிவாசன்
சி. பி. சிற்றரசு
ஏ. சித்தையன்
இராம. அரங்கண்ணல்
கோபி ஜி. என். ராசு
எஸ். ஆர். சுப்பிரமணியம்

ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்

★

இரவு 10-மணிக்கு

—— சந்திரமோகன் ——

நாடகம், தாரை ஏ. கே. எஸ். நாடக சபையாரின் சீன் செட்டிங்ஸ், போக்கஸ் லைட்டுகளுடன் மிகச்சிறப்புடன் நடைபெறும்

நாடகத்தில்

தோழர்கள் சி.என். அண்ணாதுரை, ஈ. வெ. கி. சம்பத், கே. ஆர். இராமசாமி

ஆகியோர் நடிப்பார்கள்

நாடகத்திற்கு நகைச்சுவை அரசு

என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்

தலைமைதாங்குவார்

★

மாநாட்டுக் கட்டணம் :—

வரவேற்புக் கழக உறுப்பினர்	ரூ.	5—0—0
பிரதிநிதிக் கட்டணம் (உணவுட்பட)	ரூ.	2—0—0
பிரதிநிதிக் கட்டணம்	ரூ.	1—0—0
பார்வையாளர் கட்டணம் (பெண்களுக்கு மட்டும்)	ரூ.	0—8—0

நாடகத்திற்குத் தனியாக டிக்கட் கிடையாது

கே. ஏ. முருகேசன்,
செயலாளர்.

பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி
வரவேற்புக் கழகத் தலைவர்.

துணைச் செயலாளர்கள் :
கே. எஸ். முத்து,
எம். உதுமான்

ஆர். மீனாட்சிசுந்தரம்,
பொருளாளர்.

டி. வெங்கடாசலம்,
விளம்பர உறுப்பினர்.

குறிப்பு:—கணியூர் பழனி—கோவை மார்க்கத்தில் மடத்துக்குளம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வடக்கில் 2 மைல் தொலைவில் உள்ளது. போக்குவரத்துக்கு தனி பஸ் வசதி செய்யப்பட்டுள்ளது.

இரவு வண்டிகளில் வருபவர்கள் மைவாடி ரோடு, ரயில்வே ஸ்டேஷனில் இறங்க வேண்டும். ஸ்டேஷனில் தொண்டர்கள் தயாராய் இருப்பார்கள்.

தாராபுரம்—உடுமலை மார்க்கத்தில் ஸ்பெஷல் பஸ் வசதி செய்யப்பட்டிருக்கிறது

மாநாட்டிற்கு உணவு ஏற்பாடுகள் சிறந்த முறையில் செய்யப்பட்டுள்ளன. வெளியூர்த் தோழர்கள் படுக்கையுடன் வரவும்.

"முன்னணி" வழக்கு அப்பீலில் மனு நிராகரிக்கப்பட்டது

'முன்னணி' என்ற தமிழ் வாரப்பத்திரிகை ரூ. 1000 ஜாமீன் கட்ட வேண்டுமென்று சர்க்கார் விடுத்திருந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை, பிரதம நீதிபதி, நீதிபதிகள் தோழர் பஞ்சாபிகேசசாஸ்திரி தோழர் சோமசுந்தரம் ஆகிய மூவரும் நிராகரித்து விட்டனர்.

12-6-49-ல் "முன்னணியில்" பிரசுரிக்கப்பட்டிருந்த சில விஷயங்கள் சட்ட விரோதமானவை என்றும், அதற்காக பத்திரிகை பிரசுரகர்த்தர் ரூ. 1000 ஜாமீன் கட்ட வேண்டும் என்றும் சர்க்கார் உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவை மறுத்து உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவை விசாரித்த நீதிபதிகள், சர்க்காரின் உத்தரவு கிரமமானதே யென்று கூறி மனுவை நிராகரித்தனர்.

எகிப்து மாதர்களுக்கு வோட்டுரிமை

கெய்ரோ, ஜன. 25—

எகிப்து மாதர்களுக்கு வோட்டுரிமையை நஹாஸ் பாஷா மந்திரி சபை அளித்துவிடும் என்பதில் தகராறுக்கு இடமில்லை என்று டாக்டர் ரிபாட் ஷாம்ஸ் என்ற எகிப்திய அதிகாரி நேற்று நிருபரிடம் கூறினர்.

பார்லிமெண்டில் மட்டும் இடமில்லை!

படிப்பு வாசனையுள்ள மாதர்களே வோட்டுரிமை பெற வேண்டும் என்றும் ஆனால் அவர்கள் பார்லிமெண்டில் ஸ்தானத்தைப்பெற அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவதாகவும் அவர் கூறினர்.

ஆந்திரமாகாணம் இப்போது சாத்தியமில்லை

வேறுபாடுகள் தீர்ந்தாக வேண்டும்

1950 ஜனவரி 26-க்கு முன்பு ஆந்திர மாகாணத்தை நிறுவுவதென்பது 'நடைமுறைக்குகந்ததல்ல' வென்று இந்தியசர்க்கார் ஜன 24-ந் தேதியன்று அறிக்கை விடுத்துள்ளனர். இப்பிரச்னையை மீண்டும் ஆலோசிக்க எடுப்பதற்கு முன்னர், குறிப்பிடத் தக்க வேறுபாடுகளையும் தீர்க்கப் பெறுவது மற்றும் சில்லரைப் பிரச்னைகளையும் தீர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகுமென்று அவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

இந்தியாவுக்கு ஸிரியா தூதர் நியமனம்

டமாஸ்கஸ், ஜன. 25—

ஸிரியாவின் லண்டன் தூதராக இருந்த டாக்டர் நாஜிப் அர்மானுஸி இந்தியாவில் ஸிரிய தூதராக ஸிரிய சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தியா வியாபாரக் கப்பல்கள் வாங்குகிறது

லண்டன், ஜன. 25—

எத்தனையோ உலோகத்திலான வியாபாரக் கப்பல்களை இந்தியா, பாகிஸ்தானும் வாங்கி வருகிறது என்று 'ஈவினிங் நியூஸ்' கூறுகிறது.

தி. மு. கழகக் கிளைகள்

...க்கநத்தல்—சிற்றூர்க்கிளை

வடக்கநத்தல், ஜன. 8—

25—12—49 அன்று, இவ்வூர் தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து, "தி. மு. கழகம் வடக்கநத்தல்-சிற்றூர்க்கிளை" நிறுவினர். பின்னர் கீழ்க்கண்ட செயற்குழு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—வே. விஸ்வநாதன்; துணைச்செயலாளர்:—க. பெ. ஆறுமுகம்; பொருளுறுப்பினர்:—மாணிக்கம்; விளம்பர உறுப்பினர்கள்:—வெ. அய்யம்பெருமாள், ஏ. வெங்கட்ராமன் ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—அ. நல்லதம்பி. சோ. மாரியப்பன், இரா. பச்சையப்பன், சொ. இராமசாமி, கா. பெரியசாமி, கி. இராசு, அ. மூத்துசாமி, மூதாவர் அர. மா. இராசமாணிக்கம். பிறகு நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

அரிசிபாளையம்—சிற்றூர்க்கிளை

அரிசிபாளையம், ஜன. 18—

அரிசிபாளையத்தில் (லீபஜார் மெயின்ரோட்) தி. மு. க. ஆதரவாளர்கள் அனைவரும் கூடி "தி. மு. கழகம் அரிசிபாளையம், லீபஜார் மெயின்ரோட் சிற்றூர்க்கிளை" நிறுவினர் பிறகு கீழ்க்கண்ட செயற்குழுவினை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தனர்.

செயலாளர்:—சே. மு. சிதம்பரபாரதி; துணைச்செயலாளர்:—வடிவேலு; பொருளாளர்:—மாரியப்பன்; விளம்பர உறுப்பினர்:—ஞானமலை; ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—..ஞ்சன், ராமசாமி, சோமாறன், சின்னையன் பிறகு நன்றி கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

* * *

அசாவீரன் குடிக்காடு—சிற்றூர்க்கிளை

அசாவீரன், கு. கா, ஜன. 12—

11-1-50-ல் திருச்சிமாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தைச் சேர்ந்த, அசாவீரன் குடிக்காட்டில், உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து, "தி. மு. கழகம் அசாவீரன் குடிக்காடு, சிற்றூர்க்கிளை" ஒன்று நிறுவினர். பிறகு கீழ்க்கண்ட செயற்குழுவினர் கூட்டத்தினரால் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—ஆர். கோவிந்தசாமி துணைச்செயலாளர்:—கந்தசாமி, பொருள் உறுப்பினர்:—பெ. இராமசாமி ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்: கா. க. ஆதிமூலம், ச. பச்சமுத்து,

* * *

பாலக்காடு—நகரக்கிளை

பாலக்காடு, ஜன. 18—

4—1—50 திங்கட்கிழமை நடந்த கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம் பாலக்காடு நகரக்கிளை நிறுவப்பட்டது. அன்று நடந்த தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

செயலாளர்:- எம். சுப்பரமணியன், துணைச் செயலாளர் இ. நடராசன், பொருளாளர்-ஜி. சங்கரநாராயணன், செயற்குழு உறுப்பினர்கள் ஜி. கே. இராசேந்திரன் எம். வி. சந்திரசேகரன் எம். ஏ. எஸ், முகம்மது அலி ஜே. ஜான், வி. இராசகோபால், பி. மதனகோபால், ச. வி. மாரிமுத்து, பொன்னன்.

* * *

கடுவாழக்கரை சிற்றூர்க்—கிளை

மாயவரம், ஜன. 25—

14—1—50 மாலை 5 மணிக்கு தோழர் அ. அகோரம். அவர்கள் இல்லத்தில் தோழர் சம்பந்தம் அவர்கள் தலைமையில் கூடிய அமைப்பு கூட்டத்தில் "திராவிட முன்னேற்ற கழகம் கடுவாழக்கரை சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—அ. அகோரம், பொது உறுப்பினர். கி. வீ. ராமன் விளம்பர உறுப்பினர்: எம். சுப்ரமணியம் ஏனைய செயற்குழுவினர் அ. சம்மந்தம். மு. நாராயணசாமி.

* * *

மண்டலமாணிக்கம்—சிற்றூர்க் கிளை

மண்டலமாணிக்கம், ஜன. 15—

1—1—50 ஞாயிற்றுக்கிழமை இரவு 8-30 மணிக்கு சமீனைன் தையல் மன்றத்தில். திராவிட கழகத்தலைவர் தோழர் பி. சேகரன் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதுபோது திராவிட கழகத்தை திராவிட முன்னேற்றக் கழகக் கிளையாக மாற்ற எல்லோராலும் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டது. பிறகு கீழ்க்கண்டவர்கள் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—பா. ராமகிருஷ்ணன். துணைச்செயலாளர்:—சி.கி. ராமசாமி, பொருள் உறுப்பினர்:—பி. சொசாதன், விளம்பர உறுப்பினர் மு. சுப்பிரமணியம்.

ஏனையசெயற்குழுவினர்,— க. சண்முகம், கு. பெ. சிவபெருமாள் தே. வன்னியன், பா. சண்முகசுந்தரம், க. பொன்னுசாமி, பா. மீனாட்சிசுந்தரம் நடராசன், பு.மு. குருசாமி, கா. கணேசன்.

ராமநாதபுரம் மாவட்ட கழகத்திற்கு இக்கழகத்திலிருந்து பா. ராமகிருஷ்ணன், தே. வன்னியன் ஆகிய இருவரும் மாவட்ட கழக உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

மேலூர்—சிற்றூர்க்கிளை

மேலூர், ஜனவரி 11—

இவ்வூர் தி.மு.க. அமைப்புக் கூட்டம் 6—1—50ல் தோழர் இரா. கண்ணன் அறையில் கூடியது அப்போது 'திராவிட முன்னேற்றக்கழகம் மேலூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—தோழர் அழ. சுப்பையா, துணைச்செயலாளர்:—மா. சோ. வேலு, பொருள் உறுப்பினர்:—தோழர் பா. வெள்ளைச்சாமி, விளம்பர உறுப்பினர்:—கா. மு. காதர்மைதீன், ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்-தோழர்கள் வை. தலைமலைப்பாண்டி, கா. அலாய்ஜ், சே. அ. பீர்கான், மீ. தங்கவேலு. அழகர்சாமி.

* * *

வேலூர், கசப்பா—நகர உட்கிளை

வேலூர், ஜன 20—

இவ்வூர் காரதி நிலையத்தில் 23—10—49 மாலை 3 மணிக்கு திராவிடர் கழகச் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதுபோது இக்கழகத்தை 'திராவிடமுன்னேற்றக்கழகம்—வேலூர் கசப்பா கிளை' என மாற்றி அமைக்க வேண்டுமென தோழர் பொ. குப்புசாமி, அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதை ஆதரித்து தோழர் சாரதி, குருநாதன், இராமன் ஆகியோர் பேசினார்கள். பின்பு தீர்மானம் நிறைவேறியது இறுதியாக கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— க. குருநாதன், துணைச்செயலாளர்;—கோ. ராதாகிருட்டணன், நிதிஉதவியாளர்:—கா. தட்சிணாமூர்த்தி, விளம்பர உறுப்பினர்:—கி. இராமன், ஏனையசெயற்குழுவினர்:— ந. அண்ணாமலை. பொ. குப்புசாமி, மா. பா. சாரதி, கா. லோகநாதன், வ. பார்த்தசாரதி. ஆ. ஆறுமுகம், பா. மாதவன், பொ. ஆறுமுகம். (வி-உ)

* * *

பாண்டவர்மங்கலம் சிற்றூர்க்கிளை

பாண்டவர் மங்கலம், ஜன. 18—

15-1-50-ல் ஞாயிற்றுக்கிழமை அன்று ஜெயமாணிக்கம் சிற்றுண்டிச்சாலையில் "திராவிட முன்னேற்றக் கழகம்— பாண்டவர்மங்கலம் சிற்றூர்க்கிளை" அமைக்கப்பட்டது. கூட்டத்திற்குத் தோழர் வே. சின் அவர்கள் தலைமைவகித்தார். கீழ்க்கண்ட செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்- ரா. வெள்ளைச்சாமி; துணைச்செயலாளர்- பி. மாடசாமி; பொருள் உறுப்பினர்- தோ. ஆபிரகாம்; விளம்பர உறுப்பினர்- சே. பெருமாள் ஏனையசெயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஐ. நா.வில் புதுநாடுகள் சேரும் பிரச்சினை

லேக்சக்ஸஸ், ஜன 25—

பாதுகாப்பு சபையின் திட்டமான சிபார்சு இல்லாமல், ஐ. நா. புதுநாடுகளை மெம்பராக சேர்த்துக் கொள்ளலாமா என்கிற விஷயம் சர்வதேசக் கோர்ட்டுக்கு விடப்பட்டிருக்கிறது. ஜார்டன் உள்பட இதுவரை 15 நாடுகள் மெம்பர் மனுக்கள் ஐ. நாவுக்கு அனுப்பியிருக்கின்றன.

ரஷ்யா வெளியேறியுள்ள சமயத்தில், புது நாடுகளை மெம்பராக சேர்க்கும் பிரச்னையைக்கொண்டு வரவேண்டாம் என்று பாதுகாப்பு சபை உறுப்பினர்களை யுனைடெட் ஸ்டேட்ஸ் தூதுக்குழு கேட்டுக்கொண்டிருக்கிறதாக நிச்சயமாகத் தெரியவருகிறது.

மீன் தோல்களின் பயன்

ஆஸ்லோ, ஜன. 25—

மீன்களின் தோல்களையும், அதன் எலும்பு முதலியவைகளையும் பலவிதங்களில் உபயோகப்படுத்தலாம் என்பது இங்குக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

நார்வேயில் முன்பு எறியப்பட்ட மீன் தோல்களைக்கொண்டு இப்பொழுது பர்ஸ்கள் பைகள் முதலியன செய்யப்படுகின்றன. புத்தகங்களை பைண்ட் செய்ய இத்தோல்கள் மிகவும் பயன்படுகின்றனவாம்.

மீன்களைப் பிடித்து உணவுப் பொருளாக்கி அவை வீணாகிவிட்டால் அவைகளை கால்நடைகளுக்கு ஏற்ற தீவனமாக செய்யமுடிகிறதாம். மீன்களின் சத்துபோக பாக்கியுள்ள சக்கைகள் பிளாஸ்டிக் உற்பத்திக்கு உபயோகிக்கப்படுகிறதாம்.

கிரெம்லினுக்குத் தலைவலி கொடுத்தவர் மறைவு

லண்டன், ஜன. 25—

பல்கேரியாவின் பிரதமரும் முதிர்ந்த ராஜதந்திரியுமான வாஸில் கோலாரவ் காலமானார் என்ற செய்தி கிரெம்ளினில் ஒரு பீடை ஒழிந்தது என்ற வரவேற்கத்தக்கதே என்று கூறப்படுகிறது.

கோலாரவை ரஷ்யர்கள் சந்தேகமாகவே இருந்ததுடன் அவரை உதவிப் பிரதமர் கோஸ்டாவை ஒழித்ததுபோல் ஒழிக்க முடியாமலும் கிரெம்ளின் சிறுமைப்பட்டுக்கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. வேண்டாத செய்தியை மிகத் தாமதமாக வெளியிடும் மாஸ்கோ ரேடியோ இவருடைய காலமான செய்தியை உடனே அறிவித்து விட்டது.

அடுத்த காமன்வெல்த் மாநாடு ஆஸ்திரேலியாவில்

கராச்சி, ஜன. 25—

இன்னும் இரண்டு மாதங்களில் அடுத்த காமன்வெல்த் மாநாடு ஆஸ்திரேலியாவில் நடைபெறும் என்பதைத் தோழர் [illegible] இங்கு வந்திருந்தபோது தெரிவித்தார்.

நன்றி!

1-1-50 ஞாயிறன்று நடைபெற்ற திருச்சிமாவட்ட மாநாட்டுக்குத் தலைமை தாங்கி நடத்திக்கொடுத்த கோவில்பட்டித் தோழர் வி. ரா. வன்னியமுத்து அவர்களுக்கும், திறந்துவைத்த பெத்தாம்பாளையம். பி. பழனிச்சாமி அவர்களுக்கும் சொற்பொழிவாற்றிய தோழர்கள் அனைவர்க்கும் எங்கள் மனம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநாட்டுப் பந்தலை அழகுற அமைத்துக் கொடுத்த வீ. ரா. ஜ[illegible] அவர்களுக்கும் அவரது சமூகிகளுக்கும், பந்தலை மின்சார விளக்குகளாலும், ஒலிபெருக்கியாலும் அழகு படுத்திய சாமி ஆண்டி கோ தோழர் சுப்பு அவர்களுக்கும், மாநாட்டைச் சிறப்புற நடத்த கண்காணித்து வந்த தொண்டர் படைக்கும் மாநாடு நடத்த இடமும் ஏனைய உதவிகளையும் அளித்த நகர சபையாருக்கும், தீயணைப் படையினருக்கும், மாநாட்டு விளம்பரத்தை 'சினிமா' மூலம் நல்ல முறையில் இலவசமாக விளம்பரம் செய்துதந்த திருச்சி மாவட்டத்தில் உள்ள 15 சினிமா தியேட்டர் உரிமையாளர்களுக்கும் நல்ல முறையில் உணவு தயாரித்துத்தந்த திருச்சி, காரைக்குடி தோழர்களுக்கும், எங்கள் நன்றி!

மாநாட்டில் சிறப்பான முறையில் பிரசார நாடகத்தை நடத்தித் தந்த தோழர் கே. ஆர். இராமசாமி அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் ஏனைய நடிகர்களுக்கும், மாநாட்டு மேடையையும், நாடக அரங்கையும் நல்ல முறையில் அழகு படுத்தித் தந்த திருச்சி தோழர் தங்கராம்பிள்ளை அவர்களுக்கும் மாநாட்டுப் பந்தலுக்கு முகப்பு வேலைகள் செய்து தந்த ஓவியர்களுக்கும் மற்ற உதவிகள் செய்து மாநாடு வெற்றியுற ஒத்துழைத்த தோழர்கள் அனைவர்க்கும் வரவேற்புக் குழுவினர் சார்பாக எங்களின் நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்
ஜி. பாரங்குசம்,
எம். என். மணி,
செயலாளர்கள்.

வேண்டுகோள்

அன்புள்ள தோழர்களே,

இம்மாவட்ட மாநாட்டு வரவு செலவுக் கணக்குகளை வரவேற்புக் கமிட்டியைக் கூட்டி ஒப்படைக்க வேண்டியிருப்பதால் மாநாட்டு நன்கொடைச் சீட்டுப் புத்தகங்களைப் பெற்றுச்சென்ற தோழர்கள் 29 தேதிக்குள் மாநாட்டுச் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு கோருகிறேன்.

தங்கள் அன்பன்
ஜி. பாரங்குசம்
செயலாளர்

யு. எஸ். தொழிலாளர்களில் 29 சதவிகித பெண்கள்

நியூயார்க், ஜன. 25—

யுனைடெட் ஸ்டேட்ஸில் 17,300 000 பெண் தொழிலாளர்கள் இருக்கின்றனர் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. யு. எஸ். தொழிலாளர்களில் இவர்கள் 29 சதவிகிதம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆசிரியருக்கு முடங்கல்

மந்திரி மருமகனின் திருவிளையாடல்

ஐயா,

கோவை சென்ட்ரல் ஜெயிலுக்கு எதிரில், ஒரு பெட்ரோல் பங்க் இருக்கிறது. அது பிரபல மோட்டார் ஆனைமலைபஸ் டிரான்ஸ்போர்ட் சொந்தக்காரரான தோழர் நாச்சிமுத்துக் கவுண்டருக்குச் சொந்தமானது. அதில் தோழர் விஸ்வநாதசெட்டி என்பவர் லேபர் ஆபீசராக இருந்துவருகிறார். அவர் மந்திரி சீதாராம ரெட்டியின் மருமகன்.

4—1—50ல் இந்த லேபர் ஆபீசருக்குச் சொந்தமான சர்க்கார் ஜீப் எம். டி. பி. 646-க்கு கூபன் இல்லாமல் டை நாச்சிமுத்துக் கவுண்டர் பெட்ரோல் கொடுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில், கள்ள மார்க்கெட் ஒழிப்பு சப் இன்ஸ்பெக்டர் தோழர் சி. பி. ராசகோபால், திடீரென்று சோதனையிட்டதின் விளைவாக குற்றவாளிகளைக் கையும்களவுமாகப் பிடித்துக் கொண்டார்.

டை எம். டி. பி. 646 ஜீப் டிரைவரை விசாரித்ததில், லேபர் ஆபீசரின் உத்தரவின் பேரில்தான் கூபன் இல்லாமல் பெட்ரோல் பிடித்ததாக வாக்குமூலம் கொடுத்துள்ளார். கூபன் இல்லாமல் 6-காலன் பெட்ரோல் கள்ளமார்க்கெட்டில் விற்ற குற்றத்திற்காக டை பங்க் குமஸ்தா நடராஜபிள்ளை என்பவரைப் போலீசார் கைது செய்து ஜாமீனில் விடுவித்துள்ளார்கள்.

கள்ளமார்க்கெட் உத்தியோகஸ்தர்கள் மேலும் விசாரித்து வருகின்றார்கள்.

ஏ. பி. டி. பஸ் முதலாளி தோழர் நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்களுக்கு அடிக்கடி லேபர் ஆபீசருடைய தயவு தேவைப்படுகிறபடியால் இந்தமாதிரி திருட்டுத்தனமாக பெட்ரோல் கொடுத்து 'சகா' பிடிக்கிறார் என்று பேசிக்கொள்ளுகிறார்கள்.

மேலும் டை லேபர் ஆபீசர் ஒரு காங்கிரஸ் மந்திரியின் மருமகனாக இருப்பதாலும், தோழர் நாச்சிமுத்துக் கவுண்டர் பெரியபணக்காரராக இருப்பதாலும், இவர்களுடைய கூட்டு முயற்சியினால் அந்தக் கம்பெனியில் மேல்கொண்டு எழும்பும் தொழிலாளர் பிரச்னைகளில் நீதி கிடைக்காது என்றும் அக்கம்பெனியில் உள்ள தொழிலாளர்கள் (பஸ் டிரைவர் கண்டக்டர்கள்) பேசிக்கொள்ளுகிறார்கள்.

அரசாங்கம் இந்தச்சேவை நல்ல முறையில் விசாரித்து குற்றவாளியார் என்பதைத் தெரிந்து தக்க தண்டனை கொடுக்கவேண்டாம்.

இங்ஙனம்
"உண்மை விளம்பி"

சர்வதேச சிவில் :: :: விமான ஸ்தாபனம்

லேக்ஸக்ஸஸ், ஜன. 25—

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து ஸ்தாபனத்தில் சிரியா மெம்பராக சேர்ந்து விட்டது. இரான், சவூதி அரேபியா, எமன் ஆகியவை இன்னும் இந்த ஸ்தாபனத்தில் சேரவில்லை.

மாண்ட்ரீல், ஜன. 25—

கனடாவில் வேலையில்லாமல் இருக்கும் தொழிலாளர்களுக்கான ஒரு சங்கம் ஏற்படுத்துவது பற்றி இங்குள்ள தொழிலாளர் தலைவர்கள் யோசனை செய்து வருகின்றனர். கனடா தொழிலாளர்களில் 6% பேர் வேலையில்லாதிருப்பதால் இவர்களை ஒரு சங்கத்தில் திரட்டி இவர்களுக்கான நலனை செய்யவே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

(இது வெறும் அறிவிப்பே, பிரகடனமல்ல)

பிரிட்டிஷ் சர்க்காரின் சம்மதத்தை உத்தியோகப் பூர்வமாகப் பெற்றது; அவ்வுதரவின் முழு நகல் பொதுமக்கள் பரிசீலனைக்காக புதுடெல்லியிலும் லண்டனிலும் வைக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் சர்க்கார் இந்த சம்மதத்தைத் தெரிவித்துவிட்ட காரணத்தால் டைரெக்டர்களுடையவும் போஷகர்களுடையவும் திட்டங்களும் அறிக்கைகளும் கருத்துக்களும் சரிவர இருந்துவரவேண்டுமென்ற கட்டாயமெதுவுமில்லை; பிரிட்டிஷ் சர்க்கார் இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. இத்துடன் இன்னொன்றையும் மனதிற்கொள்ளவேண்டும். இதற்கு இந்திய மக்கள் தங்கள் சம்மதத்தையும் அளிக்கவில்லை, கம்பெனியின் நடவடிக்கைகளுக்கு அவர்கள் பொறுப்பாளிகளுமல்லர்.''

[1947-ம் ஆண்டு அதிகார மாற்றச் சட்டத்தின்கீழ் கம்பெனி பிரகடனத்தின் சரியான நகல் பதிவு பெறுவதற்காக பிரிட்டன் முதலமைச்சரிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது]

இந்தியா கவர்ன்மெண்ட் லிமிடெட்.,

(1947-ம் ஆண்டு இந்தியா மாற்றச் சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது)

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்

கவர்ன்மெண்டு வருமானத்தோடு ஸ்டர்லிங் மிச்ச இருப்பைக் கூட்டி, தேசியக் கடனைக் கழித்து, பாகிஸ்தானுக்குச்செலுத்த வேண்டியதைக் கூட்டி கணக்கிட்ட தொகை.

கொடுக்கப்பட்ட மூலதனம்:

வரிகள், சுங்கங்கள் மூலம் வரும் வருமானத்தில் கள்ளமார்க்கெட்டாரிடமிருந்து கிடைக்கும்வருமான வரியைக் கழித்து, சுங்க வரி செலுத்தாமற் போனோரைச் சேர்த்துக் கொண்ட தொகை.

சுங்கவரி செலுத்தாமற் தப்பியோர் அடியிற்கண்டவாறு பிரிக்கப்படுவர்: 200 சதவிகித வரி கொடுக்கவேண்டாத மூன்று விசேஷ பங்குகள் (இம்மூன்றும் ஏற்கனவே டாடா, பிர்லா, டால்மியா விடுதிக்கு ஒப்படைத்தாய் விட்டது.)

வரி கொடுக்க வேண்டாத மூன்று சலுகை பங்குகள். (வரிகொடுக்காமல் ஏமாற்றுவோருக்கும் கள்ளமார்க்கெட்காரருக்கும் மட்டுமே இவை 'ரிசர்வ்' செய்து ஒதுக்கப்பட்டுள்ளன) மிச்சம் சரிசமமின்றி இந்தியாவின் 31.5 மக்களுக்கும் ஒதுக்கப்படுகிறது.

போஷகர்

ஹிஸ்ஹைனஸ் கோபாலாச்சாரியார் சக்ரவர்த்தி, ராஜா

வைசிராய் மாளிகை அரசர் புதுடில்லி.

டைரெக்டர்கள்

பண்டித ஜவகர்லால் நேரு எம் பி. இ.

புதுடெல்லி; டைரெக்டர், இந்தியா டிராக்டர் லிமிடெட் ஜெனரல் மானேஜர், நேரு பேனன் லிமிடெட், நேரு-டாஜ்பாய் அயல்நாட்டுப் பிரயாண ஏஜென்ஸி லிமிடெட், தலைவர், டிரக்டர் டினரவா சங்கம்.

சர்தார் வல்லபாய் பட்டேல்

பிர்லா அவுஸ், இந்தியாவில் ஒரு இடம்; தலைவர். இரும்பு எஃகு பிரம உற்பத்தியாளர் லிமிடெட்; டைரக்டர். சமஸ்தான இணைப்பு லிமிடெட்; பொது அமைதிச் சட்ட உற்பத்தியாளர் லிமிடெட்; பங்குதாரர், தாயாபாய் பட்டேல் அண்டு தப்பனூர் லிமிடெட்.

சர்தார் பால்தேவ் சிங்

'பிரென்கன்' டர்க்ஸ்யார்டு ரோடு, புது டெல்லி; தலைவர், ஆதிபானு ஓஷன் கம்பெனி லிமிடெட் (வழக்குப் பஞ்சாயை அரேபியக் கடலுடன் இணைக்க ஏற்பட்டது) டைரெக்டர், பாஜி அகப லிமிடெட்; விமானப் படை, இராணுவம், கடற் படை ஸ்டோர்ஸ் லிமிடெட்; பங்குதாரர், ஞானிகாததார் சிங், கோபிசாந்த் பார்காவா கார்பொரேஷன்; முன்னாள் பொருளாளர் அகாலிடஸ்ர நிதி முதலியன, முதலியன.

திவான்பகதூர்

சர். என். கோபாலசாமி, ஆவ் அய்யங்கார், விசேஷ ரயில்வே கோச், டெல்லி ரயில்வேபுரம், புதுடெல்லி; நிரந்தரத் தலைவர், அயல்நாட்டு ஸ்தானீகாலயம்; ஊக்குவிப்பாளர், இந்திய தோல்வியுற்ற வீரர் லிமிடெட்.

புரொபசர் என். வி. காட்கில்

காவல் மிகவுடை பங்களா, புதுடெல்லி; தலைவா சிறுகைத்தலைய தார மிழகத்தார மறுமண ஆதரிப்புச் சங்கம்; டைரெக்டர், ஸ்ரீகாந்த் உற்பத்தியாளர் சிண்டிகேட் லிமிடெட், அமிதபார்க அண்டு கம்பெனிலிமிடெட்; ஹைடல் மைனஸ லிமிடெட் முதலியன முதலியன.

மௌலானா அபுல்கலாம் அசாத்

'இட்டாரா-பாத' தேசிய முஸ்லீம சதுககம், புதுடெல்லி; தலைவர் முறபோககு கவ்ஞர் சங்கம்; டைரெக்டர், கபீர, கபீர அண்டு தாரா சாந்த லிமிடெட்; டிரஸ்டி தேசிய முஸ்லீம (நாலவா) இந்தியா டிரஸ்ட் முதலியன.

ராபி அகமதுகித்வாய்

'தபால் பெட்டி' ஜி. பி. ஓ. ரோடு, புதுடெல்லி; டைரெக்டர், போஸ்டல சர்விஸ லிமிடெட்; செயலாளர் ஸடாப்பு ஏறபோர யூனியன்; முன்னாள் அமைப்பாளர் ஆதிய தேசிய முஸ்லீய லீக்கைப பாதுகாப்பு சங்கம்;

ஸ்ரீ ஜகஜீவன்ராம்

'மஸ்தூர்சபா', சாந்தினி சௌக், டெல்லி; தலைவர் ஹரிபா ஜனிக் மண்டலி; டைரெக்டர், மேல தேடித்தரும ஸ்தாபனம லிமிடெட் முதலியன முதலியன.

ஸ்ரீ சியாம்ஜி. பிரசாத்ஜி. முக்கர்ஜி

'வங்காள விடுதி: வங்காளி மோஹோலா, வங்காளி ரோடு, புதுடெல்லி; போஷகர் வங்காளி சிப்பந்திகள் யூனியன்; டைரெக்டர் கோஷ், போஷ், மதோஷ் லிமிடெட்; டிரஸ்டி, ரே எசஸ்ரே டிரஸ்ட் முதலியன, முதலியன.

மானேஜிங் ஏஜெண்டுகள்:

பட்டாபி சீதாராமய்யா அண்டு காரியக்கமிட்டி, சர்தார் பட்டேல் விடுதி, புதுடெல்லி.

பாங்கர்கள்

இந்தியா அதிகம் ரிசர்வ் (செய்யும்) பாங்கி

ஆடிட்டர்கள்:

ஜான்மத்தாய் அண்டு கோ; பதிவு பெற்ற அக்கவுண்டண்டுகள், பம்பாய்அவுஸ், பம்பாய்.

சொலிசிட்டர்கள்

அம்பேத்கார் அண்டுகோ, சட்டம் தயாரிப்புத் தெரு, கைதி சதுக்கம், புதுடெல்லி.

பதிவு பெற்ற காரியாலயம்

செகரடேரியட், புதுடெல்லி

நோக்கங்கள்

மெமோரண்டத்தில் குறிப்பிடப் பெற்ற நோக்கங்களுக்காகவும், சிறப்பாக அடியிற் கண்டவற்றுக்காகவும் இக்கம்பெனி நிறுவப்பெற்றுள்ளது:

(அ) வாழ்க்கைத்தரத்தை உயர்த்த ஏழையர்க்கு வலியை வரும் வகையில இந்திய மக்களுக்கு வரி விதித்தல்,

(ஆ) எதிர்க்கட்சி யனைத்தையும் எதிர்த்து ஒரு கட்சி சர்க்கார அமைப்பதும் டைரெக்டர்களுடையவும் அவர்கள் நண்பர்களுடையவும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள் ஆகியோருக்கு ஜனநாயகத்தைப் பத்திரமாகப் பாதுகாத்து வருதல்.

(இ) சொற்பொழிவுகள், வானொலிப் பேச்சுகள், உணவு கமிஷனர் நியமனங்கள் ஆகியவற்றின் மூலம் உற்பத்தியைப் பெருக்குதல்.

(ஈ) அயல் நாடுகளில் ஸ்தானீகாலயங்கள் நிறுவுதல்; நண்பர்கள், சுற்றத்தார் ஆகியோரை அம்பாசிடர்களாக நியமித்தல்.

இயற்கையான எல்லா நன்மைகளோடும் இக்கம்பெனி துவக்கப்பட்டது.

டைரெக்டரின் பண்புகள்

டைரெக்டரென்பவர் இந்திய தேசிய காங்கிரசினுடையவோ, தாழ்த்தப்பட்ட வகுப்பு பெடரேஷனுடையவோ, இந்துமகா சபையினுடையவோ உறுப்பினர்களாக இருக்கவேண்டும். டாடா சன்ஸ் லிமிடெட்டில் பணியாற்றுவோரும் இடம்பெறலாம். விரும்பினால் சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படுவர்.

கம்பெனி சர்விஸ் நியமனங்கள்

கவர்னர்கள், அட்வைஸர்கள், அம்பாசிடர்கள் ஆகியவர்களுக்கான விண்ணப்பங்களை டைரக்டர்களில் ஒருவருக்கு நேரடியாக அனுப்ப வேண்டும். வயது, படிப்பு அனுபவம், டைரெக்டருக்கு எப்படி உறவு என்பது தெளிவாகக் குறிப்பிடப் பெற வேண்டும்.

பங்குதாரர்களாகச் சேர விரும்புவோர், அதற்கான விண்ணப்ப பாரங்களை கீழ்கண்ட கம்பெனி புரோக்கர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். உலக ஐக்கிய நாடுகளின் மாட்சிமை தங்கிய சர்க்கார், எல்லா டொமினியன்களுடையவும் சர்க்கார்.

—'பிளிட்ஸ்'

இனி நடப்பவை

வலையப்பட்டி — இவ்வூர் சுதந்திர குடியரசு சங்கத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா 28—1—50 சனி பிற்பகல் 3 30 மணிக்கு தோழர் செ. திருநாவுக்கரசு எம். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. கா. அருணாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னை—சென்னைக் கல்விச் சங்கத்தின் ஏழாம் ஆண்டு நிறைவு விழா 29—1—50 ஞாயிறு மாலை 3-மணிக்கு குளப்பட்டணம் ஸ்டாரன்ஸ் ரோட, கார்ணமைத் கழக ஆண்டாட்ச லையில் நடைபெறும். அதுபோது பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவர். நாதஸ்வர இன்னிசை விருந்தும் நடைபெறும்.

* * *

வேலூர்—இவ்வூர் திருவள்ளுவர் சொற்பயிற்சிக் கழகத்தின் பயிற்சிக் கூட்டம், 28-1-50 ஞாயிறு காலை 9 மணிக்கு தி. மு. க. அலுவலத்தில் நடைபெறும்.

* * *

மதுரை—நகர தி. மு. க. வினின் செயற்குழுக் கூட்டம், 29-1-50 ஞாயிறு மாலை 3 மணிக்கு தெற்குவாசல் தாலமுத்து நடராசன் நினைவுப் படிப்பகத்தில் நடைபெறும். அதுபோது பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களின் மதுரை வருகையைப்பற்றி ஆலோசிக்க இருப்பதால், இதையே அழைப்பாகக் கொண்டு, செயற்குழு உறுப்பினரனைவரும் வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

காஞ்சீபுரம் பச்சையப்பன் கல்லூரி அமைப்புக்குழு

அறிக்கை

கல்வி நலம் கருதும் பெருமக்களே, வணக்கம்!

அழியாப் பெருஞ் செல்வமாகிய கல்வியே பெற்றோர் தம் மக்களுக்கு வழங்கும் சீதனம் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இப்பெரு நகரத்தில் வாழும் நாம், நம் சிறுவர் சிறுமியர்க்கு உயர்தரக் கல்வியைக் கற்பிப்பதற்கு அயல் நகரங்களிலுள்ள கல்லூரிகளையே நாடவேண்டியிருப்பதால், பெரும் பொருட் செலவுடன் பலவித இடையூறுகளையும் மேற்கொள்ள வேண்டியவர்களாயிருந்து வருவது யாவரும் அறிந்ததன்றோ? இதற்கு ஒரு வழி வகுக்க வேண்டுவது நமது தனிப் பெருங்கடமையாதலின், இந்நகரத்தில் மேற்படி கல்லூரியை அமைக்கும் முயற்சியைப் பெருமக்களாகிய உங்கள் நல்லுதவியை நம்பி மேற்கொண்டிருக்கிறோம். ஒல்லும் வகையால் உதவி செய்து இந்த நல்ல திருப்பணியை நிறைவேற்றி இந்நகரத்தின் என்றும் அழியாத நன்றிக்குரியவர்களாகும்படி அனைவரையும் மிக்க பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறோம். இவ்வாண்டு ஜூன் மாதத்திலேயே கல்லூரியைத் தொடங்கப் பெரிதும் முயன்று வருகிறோம். இத்திருப்பணிக்கு, தங்களாலியன்ற பொருளுதவியளிக்குமாறு வேண்டுகிறோம்.''

பொருளுதவும் பெருமக்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற வேண்டுகிறோம். எம். கண்ணப்ப முதலியார், 'வேங்கடேச பவனம்', 16 கார்திரோடு, காஞ்சீபுரம் என மேற்படி குழுவின் செயலாளர் எழுதுகிறார்.

கூட்டு முன்னணியால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாடட்புருஷவைப்பிடிக்கவேண்டும். அந்த மாடட்புருஷவை நாம் பிடித்துத் திராவிடசமுதாயத்தினிடம் காட்டவேண்டும். இதுதான் நம்முன் நிற்கும் பிரச்சினை.

சிங்கம் புலிக்கு மத்தியிலே நாம் பேசுகிற இந்தநேரத்தில், நேருவின் ஆசைத்தமக்கையும் உல்லாசம மங்கையுமான விஜயலட்சுமியார் உல்லாசமாக அங்கு பேசிக் கொண்டிருப்பார். ரஷ்யாவிலோ தூதுவராகஇருப்பவர் ஒருவேதாந்தி பிரான்சில் ஒரு தூதுவர். இப்படி வெளிநாடுகளிலே பற்பல தூதுவர்கள் அவர்களுக்கு உண்டு.

வானத்திலே அசோகச் சக்கரக் கொடி, அலைகடலிலே மூவர்ணக் கொடி, சர்க்கார் நிலையங்களிலே அவர்கள் கொடி, வெளிநாடுகளிலே கூட அந்தக் கொடி ஒய்யாரமாகப் பறந்துகொண்டுதானிருக்கிறது. இந்த நிலையை நாம் மறந்துவிடவில்லை. அவ்வளவு பெரிய சக்தியைத்தான் நாம் எதிர்த்து நிற்க வேண்டியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினரே! குடியரசுத் திருநாளுக்கு அழைப்பு அனுப்புகிறோம், வருகிறீர்களா? என்று அரசாங்கத்தினர் அழைப்பு அனுப்பினால், நிச்சயமாக அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுவோம்.

இப்பொழுது பொதுமக்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிற காரணத்தால், அரசியல் திட்டத்தை மாற்றி அமைக்கும்படி கூறுகிறோம்.

அரசியலை மாற்றுவோம்

உங்கள் மீது தான் நான் வற்றாத நம்பிக்கை வைத்திருக்கிறேன். உங்கள் வல்லமையின் துணையால் பல காரியங்களைச் சாதிக்க முடியும்-என்ற நம்பிக்கை எனக்குண்டு.

கோட்டையிலே, வானமுகட்டைத் தொட முயற்சிப்பது போல் பறக்கும் அசோகசக்கரம் கொடியின் கீழ், நாம் அரசியல் திட்டத்தை மாற்றி அமைக்க முடியும். நாம் அரசியல் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டுமானால், மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி இருந்தால் தான் முடியும்; நாங்கள் தேர்தலுக்கு நிற்கப்போவதில்லை. ஆனால் சுயேச்சைக் கட்சி அன்பர்களில் பலர் நம்மவராகவே இருப்பார்கள். ஜில்லாபோர்டு தேர்தல் காங்கிரசுக்கு நல்ல பாடத்தைக் கற்பித்துக் கொடுத்திருக்கிறது. அசெம்பிளியில் தூக்கு கரத்தை என்றால் உடனே 200 பேர் கரத்தைத் தூக்க காத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி எவ்வளவு காலங்களுக்கு நடக்க முடியும்?

அரசியல் யூகம் தெரிந்தவர்கள் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை நன்கு கண்டுகொள்ள முடியும். சட்டசபையிலே இனி ஜனநாயகம் மலராமலாபோகும்? சட்டசபையிலே விரைவில் ஜனநாயகம் மலரத்தான் போகிறது. அதை நாம் பார்க்கத்தான் போகிறோம்.

சட்டிமலே இருக்கும் மாவில் பாதிக்குமேல்வடக்கே சென்றுவிடுகிறது குறைவாக வைத்துக்கொண்டு தோசையைச்சுட முடியாது. இதை சனம் கோபால ரெட்டியார் நன்கு உணரவேண்டும்.

கூட்டு முன்னணி அமைப்போம்!

அரசியலமைப்பை மாற்றி அமைக்க இந்தியத் துணைக்கண்டத்திலே ஒரு கூட்டு முன்னணியை நிச்சயமாக அமைத்துத்தான் தீருவோம்.

அஸ்சாமிலே தேயிலை ஏராளமாகவிளைகிறது. அதை வைத்துக்கொண்டுதான் அஸ்சாம் மாகாணம் ஆட்சி நடத்த முடியும். அஸ்சாம் பிரதிநிதி "பழைய பாத்தியத்தைக் கொண்டு நாங்கள் பர்மாவிலே சேர்ந்துவிட்டாலும் சேர்ந்துவிடுவோம்" என்று எச்சரிக்கை செய்திருக்கிறார். பாகிஸ்தான் சோவியத்திலே ஒரு பகுதியாக சேர்ந்தாலும் சேர்ந்துவிடும் என்று பெரோஸ்கான் நூன் பேசியிருப்பதை நீங்கள் பத்திரிகையிலே பார்த்திருக்கலாம். அஸ்ஸாம், வளமுள்ள வங்காளம், ஆந்திரத்துக்குப் போன ஆந்திரம், மருவி கொண்ட மலையாளம், இவற்றோடு தன்னிகரற்ற தமிழகம் இவற்றைக்கொண்டு ஏன் மெஜாரிடி பெற முடியாது?

இங்கு கூடியுள்ள கூட்டத்திலே பேர்முனையின் ஈட்டிமுனைகளான வாலிபர்களைக் காண்கிறேன். மாநாட்டில் சிகரெட் வைத்துக்கொண்டுள்ள கைகளில் இருக்கும் சிகரெட்டுகள் எல்லாம் எனக்கு கூர்மையான துப்பாக்கிகளாகக் காட்சியளிக்கின்றன.

பெரும்பாலோர் இங்கு இராணுவ உடையிலே காட்சி அளிப்பதைக் காண்கிறேன். பலர் அழகிய திராவிடக் கொடியை ஏந்தி நிற்பதை மனக்கண்முன் காண்கிறேன்.

"தாயின் மணிக்கொடி பாரீர்—இதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்" என்று பாரதியார் தாயின் மணிக்கொடி கோட்டையிலே பறப்பதற்கு முன்தான் பாடினார். நாமக்கல் கவிஞர் "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்று யுத்தம் வருவதற்கு முன்னே பாடினார்.

தமிழரின் தனிப்பண்பு

தமிழரின் சிறந்த பண்பு எனக்கு நன்கு தெரிந்திருக்கிற காரணத்தால், நம்முடைய வாழ்நாளில் நிச்சயமாக திராவிட நாட்டைக் காண்போம் என்ற உறுதி எனக்குண்டு. அந்த உறுதி உங்களுக்கும் இருக்கவேண்டும்.

ஜனவரி 26-ம் தேதி அதிருப்திக்குரிய நாள் என்ற வீரப் பரணியை திக்கெட்டும் முழக்குவோம்! ஜனவரி 26-ம் தேதி துக்க நாள் அல்ல நம்மை நாம் தயார்படுத்திக் கொள்ளும் நாள்.

நரிக்கும் ஒரு புதர் இருக்கிறது! புலிக்குமொரு குகை இருக்கிறது! பாம்புக்கே புற்று இருக்கிறது! பறவைகளுக்கோ மரக் கிளைகள் இருக்கின்றன! இப்படி இருக்க திராவிடர்கள் அனைவரும் ஒன்றுகூடி வாழ ஒரு இடம் வேண்டாமா? நாலரை கோடி மக்களுக்கும் ஒரு இடம் வேண்டாமா? இதற்காக நாம் என்ன பீடுடைய பிரமாபுரி மேவிய பெம்மானைத் தேடி அலைய முடியுமா? நாம் என்ன நாட்டை ஆளத் தெரியாதவர்களா? அல்லது நாட்டை ஆண்டதுதான் இல்லையா? விந்தியமலையிலிருந்து குமரி வரை எந்தக் காலத்திலும் வடநாட்டார் ஆதிக்கம் செலுத்தியதில்லையே! சந்திரகுப்தன் காலத்திலும் இல்லை. கனிஷ்கன்காலத்திலும்இல்லை, புலிகேசியின் காலத்திலும் இல்லை, அவுரங்கசீப் பால்கூட விந்தியமலைக்கு அப்பால் வர முடியவில்லையே! இவர்கள் ஆண்டதெல்லாம் விந்தியமலைக்கு அப்பால்தான் படையெடுப்புகள் நடந்திருக்கின்றன. அவைகளும் முறியடிக்கப்பட்டிருக்கின்றன தசாவதாரம் என்றால் உங்களுக்கு நன்கு தெரியும். தசாவதாரத்திலே இரண்டே இரண்டு அவதாரங்கள்தான் மனித அவதாரம் எடுத்தது. அந்த இரண்டு அவதாரங்களும், விந்திய மலைக்கு அப்பால்தான் எடுத்தன நாடகத்திலே குறிப்பிட்டதுபோல தமிழர்களுக்கு இரண்டுதான் தெரியும். ஒன்று தோழமை; மற்றொன்று பகைமை இவையிரண்டும் தவிர தமிழர்களுக்கு வேறொன்றும் தெரியாது, ஆனால் தமிழகத்தைத் தாக்கிப் பேசிய வடநாட்டாரை, தமிழர்கள் தான் பணியச் செய்திருக்கிறார்கள்.

திராவிட இனத்தின் மார்க்கத் துறை ஆரியரிடமும், அரசியல் டில்லியிலும், பொருளாதாரம் பம்பாயிலும் பிணைக்கப்பட்டிருப்பதை நாம் கூறி நாலரைகோடி மக்களுக்கும் தனி அரசு கோருகிறோம் இதில் என்ன தப்பு?

—:[தொடர்ச்சி நாளை]:—

பிலிம் மூலம் கல்வி போதனை

லண்டன், ஜன. 26—

ஜேம்ஸ் ஹார்வார்ட் என்பவர் இதர மொழிகளைக் கற்பதற்கு பாடபுத்தகங்களைவிட சினிமா பிலிம்களே தகுந்த சாதனமென்று ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்.

மொழி புரியாவிட்டாலும், படத்தை அடிக்கடி பார்ப்பதன் மூலம் படங்களில் நடிப்பவர்களின் நடிப்பிலிருந்தே தாங்கள் அறியாமலேயே மொழியைக் கற்கலாமென்று அவர் கூறுகிறார் இத்திட்டம் குழந்தைகள் விஷயத்தில் வெற்றி கண்டிருக்கும்போது முதியவர்கள் விஷயத்தில் ஏன் வெற்றிகாண முடியாது என்று அவர் கேட்கிறார்.

அணில் தொல்லையை ஒழிக்க!

லண்டன், ஜன. 26—

பிரிட்டிஷ் சாலைகளிலுள்ள சில சாம்பல் நிற அணில்களால் சேதப்படுத்தப்பட்டு வருகின்றனவாம். இந்த அணில் தொல்லையை ஒழிக்க பிரிட்டன் ரூ. 1330,000 செலவிட்டிருக்கிறதாம்.

பேட்ஜ்கள்!

"கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டுப் பந்தலில் கழகக் கொடிகள் நல்ல முறையில் பேட்ஜ்களாக சட்டையில் குத்திக்கொள்ளும் முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும்.

ஒன்றின் விலை 0—4—0 அணா

வியாபாரிகளுக்கு 12½ சத விகிதம் கழிவு உண்டு

சி. வி. நாகப்பன், கணியூர்.

குடியரசு கோமாளிக் கூத்துக்கள்!

இந்தியாவின் புது அரசியல் திட்டம் அச்சடிக்கப்பட்ட மூன்று புத்தகங்களில் டாக்டர் ராஜேந்திர பிரசாத் கையெழுத்திட்டபொழுது அக்கிரஹாரத்தினர் பேரானந்த வெள்ளம் கரைபுரண்டோடியது! அந்த வெள்ளத்திலே, சென்னை மாகாண உறுப்பினரான தோழர் முனுசாமிப்பிள்ளை அகப்பட்டுக் கொண்டு தத்தளித்தார். என்ன செய்வதென்றே அவருக்குப் புரியவில்லை! ஒரே நின்றால் அந்த வெள்ளம் தன்னை எங்கே அடித்துக்கொண்டு போய்விடுமோ என்று பயந்து எழுந்து நின்று "ரகுபதி ராகவ ராஜா ராம்" என்ற பாட்டைப்பாடி ராமனைத்தேடினாராம்!

* * *

குடியரசின் தலைவராக தோழர் ராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டவுடன் சபையிலிருந்தோரெல்லாம் கை தட்டி ஆரவாரம் செய்தனர். கைதட்டும் ஓசைமட்டும் போதாதென்று நினைத்த சனாதனிகள் சிலர் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளைப்போல் மேஜைமீது இருகைகளாலும் தட்டி ஓசையை எழுப்பினர்! இவர்களில் சாக்ஸனா என்பவர் ஒரு கையால் மேஜையைத் தட்டிய வண்ணம் மற்றொரு கையால் பக்கத்திலிருந்த உறுப்பினர் முதுகிலும் தட்டினாராம். பாவம்! இவர்களுக்குக் கொண்டாட்டம்; பக்கத்திலிருந்தவருக்கும் திண்டாட்டம் போலும்!

செக். கில் பாதிரிகளுக்கு நிர்ப்பந்தம்

வியன்னா, ஜன. 26—

செக்கோஸ்லோவாகியாவிலுள்ள பாதிரிகள் அங்குள்ள கம்யூனிஸ்ட் சர்க்காரிடம் விசுவாசப் பிரமாணத்தில் கையெழுத்திடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இதற்கு மறுக்கும் பாதிரிகள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிர்ப்பந்தம் சாதாரண பாதிரிகளிடமிருந்தே வாங்கப்படுகின்றதே தவிர ஆர்ச்பிஷப்கள், கார்டினல்கள் இவர்களிடமிருந்து வாங்கப்படவில்லை.

டிராம்கள் மோதி பத்து பேர் மாண்டனர்

கெய்ரோ, ஜன. 26—

கேப்டவுன் நகரில் இரண்டு டிராம் வண்டிகள் மோதிக் கொண்டதால் 10 பேர் மாண்டனர். பலர் காயமடைந்தனர்.

வெளிவந்துவிட்டது

காமக்குளம்

சிறந்த கதைப் புத்தகம்

விலை அணா 0—8 0

விற்பனை கழிவு 25%

செலவு இனாம்

எரிமலைப் பதிப்பகம்

துறையூர், திருச்சி Dt.

வானொலி

(28-1-50 சனிக்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 டி. எச். சோமவல்லி—வீணை
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாபாட்டுகள் (இ. த.)

பிற்பகல்:

1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-50 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 சிறுவர் நிகழ்ச்சி

மாலை:

5-30 டி. டி. வசந்தா—வீணை
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 பி. லீலா—பாட்டு

இரவு:

7-00 எஸ். ஏ. ரஹ்மான் விதார்
7-15 தமிழில் செய்திகள்
7-30 [illegible] (இசைநாடகம்)
7-45 எம். கே. தியாகராஜ பாகவதர்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 ஆங்கிலத்தில்—செய்திகள்
10-30 முடிவு

* * *

திருச்சி

[396·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 ஆர். சந்தானம்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 பி. ஏ. செம்பரநாதன்—வயலின்
8-30 காலை இசை (இசைத்தட்டு)

பிற்பகல்:

1-00 பி. ஏ. செம்பரநாதன்—வயலின்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1.50 சர்வகலாசாலைகளுக்கு—செய்தி
2-00 தமிழில் செய்திகள்
2-10 சர்வகலாசாலைகளுக்கு

மாலை:

5-00 ஆர். சந்தானம்—பாட்டு
5-40 இ. நடராசன்—கிளாரினெட்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சிந்தாமணி (இசைத்தட்டு)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சேர்ந்த விளக்கம்
7-45 சென்னையில் உள்ளது
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 இ. நடராசன்-கிளாரினெட்
9-35 இசைவேளை (இசைத்தட்டு)
10-00 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy atthe MercantilePress. 2/45, Muthumari Chetty Street, Madras-1.